மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Victims involved in accidents.

* 93 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the amount disbursed to victims involved in accidents, viz., (1) employees and (2) third parties by the State Transport Department during 1969–70–71 ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விவரங்கள் கிழே கொடுக்கப் பட்டுள்ளன:—

ஆண்டு.	தொழிலாளர் இழப்பீட்டுத் தொகையாகப் பணியாளர்களுக்குக் கொடுதத தொகை:	நீதிமன்றங்கள் மூலம் மூன்றும் நபர்களுக்கு வழங்கிய தொகை.	பேச்சுவார்த்தைகள் மூலம் செலுத்தப் பட்ட தொகை.
(1)	(2)	(3)	(4)
1969–70	இல்லை	2,35,323·25	13,080·16
1970–71	15,000.00	7,82,431·61	5,954·46

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மாதிரித் தொகை கொடுக்கும்போது இன்ஷூரன்ஸ் செய்வதன் மூலம் தொகை கொடுக்க ஏற்பாடு செய்தால் குறைவாக இருக்குமா? இதிலே எந்த முறை லாபகரமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

State Transport Central Workshop at Chromepet.

* 94 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there was any fire accident in the State Transport Central Workshop at Chromepet about the 5th June 1971; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையில் அரசுப் போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களிரியின் உதிரிப்பாகங்கள் பண்டகசாலைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதவாக்கெட்ட வண்டிகளில் ஒன்று 5—6—1971 அன்று காலை சுமார் 10-49 மணிக்குத் தீப்பிடித்துக் கொண்டது. அதற்கு அருகில் இருந்த மற்றொரு வண்டிக்கும் அத்தீ பாவியது. இரண்டு வண்டிகளும் சேதமடைந்தன. தீயணைப்புப் படையின் உதவியால் காலை சுமார் 11-15 மணிக்குத் தீ முழுவதும் அணைக்கப்பட்டது.

1971 டிசம்பர் 4]

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether the Government will consider putting up of fire-proof structures?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனியாக நிறுத்தி வைக்கப்பட்ட கண்டெம்டு பஸ்களில் பிடித்த தீ விபத்தாகும் இது. ஃபயர் ப்ரூப் ஸ்டரக்சர்ஸ் அங்கே இடம் பெறவில்லை. வேண்டிய அளவுக்கு ஃபயர் எக்ஸ்டிங்விஷர்ஸ் வைக்கப்பட்டிருக்கின்றன. தண்ணீரைக் கொண்டுசெல்லும் பைப் லைனும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணமே, அழிவின் மூலந்தான் ஆக்கத்தை உருவாக்க முடியும் என்று தீவிர வாதம் பேசுகின்றவர்கள்தான் என்பது அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது தீவிர வாதத்தால் வந்தது அல்ல, தீயினால் வந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I wanted to put a supplementary on Question No. 92, but I was not given a chance.

MR. SPEAKER: The Hon. Member will get a number of chances. Chances are many.

நிலைவாணிசுவரர் கோயிலில் நகைகள் களவு.

* 95 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருப்பைஞ்ஞீலியில் உள்ள நிலைவாணி சுவரர் கோயில் நகைகள் களவாடப்பெற்றனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) சுமார் ரூ. 10,000 மதிப்புள்ள தங்க நகைகள் கோவிலுக்குள் இருந்து பாதுகாப்பு அறை மற்றும் இரும்புப் பெட்டகம் ஆகியவற்றிலிருந்து 11—7—1971 அன்று இரவு களவாடப்பட்டுள்ளன.

திரு. பெ. மலைச்சாமி: பொதுவாகக் கோயில்களில் இதுமாதிரித் திருட்டுப் போகக் காரணம் நீண்ட நாட்களாகக் கோயில்களில் இருக்கக்கூடிய கோயில் பெருச்சாளிகள்தான் என்பது அரசுக்குத் தெரியுமா?